1971 ஜூலை 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: லைசென்ஸ் எதுவும் இல்லாததால்தான் அவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். காரிலே சென்ற மனிதேசு, விநாயகம், வர்கீஸ் என்ற மூன்று பேர்கள்மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, மதுவிலக்கு ரத்து ஆனதால், வழக்கு மன்றத்திலே இருக்கும் வழக்குகள் திரும்பப் பெறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே சாட்டப்பட்ட குற்றங்கள் மீது போடப்பட்ட வழக்குகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

திரு. எம். ஏ. லத்திப்: தலைவர் அவர்களே, இவ்வாறு கள்ளச்சாராயம் பிடிக்கப்பட்டால் அது பயன்படுத்தப்படுகிறதா? விற்பனை செய்யப்படுகிறதா அல்லது அழிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வழக்கு விசாரணையில் தீர்ப்பு வழங்கப் பட்டபிறகு, பெரும்பாலும் இவை அழிக்கப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, வெளி நாட்டுச்சாராயம் கொண்டு வரும்போது, பலவிடங்களில் 'செக்' செய்கிறார்களே, அப்படி இருக்கும்போது 100, 115 பாட்டில்கள் எப்படி வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகள் ஒன்றும் கால், கை முளைத்து வந்துவிடவில்லை, காரிலேதான் வந்தன.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, வெளிநாட்டு கள்ளப் பொருள்கள் அங்கே உள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளில் விற்பனை செய்யப் படுகிறது. இம்மாதிரியான மதுபானங்களை நீண்டநாட்கள் கழித்து, அழித்து விடுவது என்ற உத்தரவு அளித்து, அதற்குப் பிறகு அழிப்பதற்குப் பதிலாக, கூடியவிரைவில் இப்படிப்பட்ட மதுக்களை விற்பனை செய்ய ஆலோசனை செய்து, லைசென்ஸ் பெற்றவர்கள் மூலம் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தச் சங்கடமெல்லாம் இன்னும் ஒரு மாதத்திற்குத்தான்.

திரு. சொ. காவேரிமணியம்: இவ்வாறு கள்ளச்சாராயத்தைக் கொண்டு சென்ற வாகனமான கார் கைப்பற்றப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கார் கைப்பற்றப்பட்டுத்தான், அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

Seizure of 'Illustrated Weekly of India'

*494 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the copies of the "Illustrated Weekly of India" were seized by the police about February—March, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

ராஜ்பவனை சுற்றுலா மாளிகையாக்கல்

*495 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள தமிழக ஆளுநரின் மாளிகையை சுற்றுலா மாளிகை யாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுபற்றிய செயற்குறிப்பு இப்பொழுது எதுவும் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தற்போது புதிதாக வந்துள்ள ஆளுநர் தனது மாளிகையின் பரப்பளவினைக் குறைத்துக் கொள்வது பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாளிகையை மாற்றுவது பற்றி கருத்து தெரிவிக்கவில்லை. ஆனாலும், மாளிகையோடு ஒட்டியிருக்கின்ற நிலப்பரப்பை குறைத்துக்கொள்வது பற்றி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையிலுள்ள கவர்னர் மாளிகை ஆண்டுக்கு 10 மாதங்கள் யாரும் உபயோகிக்காமல் இருக்கிறதே, அதை அந்தப் பத்து மாதங்களில் நல்ல காரியத்திற்கு உபயோகப்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பத்து மாதங்களில் நல்ல காரியங்கள் எத்தனைக்கோ பயன்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: ஆளுநர் மாளிகை சம்பந்தமாக அகில இந்திய ரீதியில் கொள்கை வகுத்து, இப்படிப்பட்ட ஆடம்பரமான இடங்களைக் குறைப்பதுபற்றி மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது ஆலோசனை வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆளுநர் ஆடம்பரம் இல்லாத அளவில் இருக்க இவ்வளவு பெரிய இடம் தேவையில்லை என்கிற குறிப்புக்கள் அனுப்பப் பட்டு, இந்த மாளிகை மாற்றப்பட்டு, வேறு இடத்தில் வைக்கப்படலாம் என்று தமிழக அரசு முடிவு செய்து, அதற்கு ஒப்புதலை மத்திய சர்க்காரி டமிருந்து பெற வேண்டிய நிலைமை இருந்ததால், ஒப்புதல் பெற கடிதம் எழுதப் பட்டது. அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதியதில், இந்த அரசின் நோக்கத்தைப் பாராட்டுவதாகவும், அதே நோக்கில் அகில இந்திய ரீதியில் எல்லா இடங்களிலும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பதால், பொறுத்திருக்க வேண்டும் என்றும் பிரதமர் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நமது ஆளுநர் மாளிகையை மாற்றும்போது, அந்த மாளிகையை எதற்கு உபயோகிப்பதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?